# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு. எஸ். தனராசு, பி.இ.,
## திட்ட அனுமதி
## நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். **3260/2018/உதிகு-2** நாள்: **13.02.2019**
தி.அ.எண். 58/2019
உள்ளாட்சியின் பெயர்: காடம்பாடி ஊராட்சி

பொருள் : மனைப்பிரிவு - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - காடாம்பாடி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்.138/2B, 138/3B-ல் **4.445** ஏக்கர் மனைப்பரப்பில் - உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு - திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் திரு. G.S.ராஜேஸ் மற்றும் 3 நபர்கள் கோவை அவர்கள் விண்ணப்பம் நாள். 02.07.2018.
2. தனி அலுவலர், காடாம்பாடி ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண். 1549/2016/ஆ2 நாள்.16.07.2018.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் எண்.42 நாள்.31.7.2019.
4. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்திய நாள். 12.2.2019.

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் , கோயம்புத்தூர் மாவட்டம் , சூலூர் வட்டம் , காடாம்பாடி ஊராட்சி மற்றும் கிராமம், நிலஅளவுஎண்.138/2B, 138/3B-ல் **4.445** ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ/கோ.உ.திகு.எண்.49/2019** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்திற்கு இவ்வலுவலகத் **திட்ட அனுமதி எண்.58/2019** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை-1

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authoriy.

## பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு

   (1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,

   (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

# சூலூர் ஊராட்சி ஒன்றியம் காடாம்பாடி ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.ரா.நாகராஜன் எம்.காம்., அவர்கள்

ந.க.எண் : 1555/2016 ஆ2 நாள் : 15.02.2019

மனைப்பிரிவு அங்கீகார எண் 01/2018-19

பொருள் சூலூர் ஊராட்சி ஒன்றியம் - காடாம்பாடி ஊராட்சி - நில அளவு எண் 138/2B ,138/3B ல் 4.445 ஏக்கர் மனைப்பிரிவு அமைத்தது - மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

காடாம்பாடி ஊராட்சி * சூலூர் Tk. * காடாம்பாடி - 641 401

பார்வை 1.உறுப்பினர் செயலர் (பொறுப்பு),கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் ந.க.எண் 3260/2018/உதிகு-2 நாள் 15.02.19 மற்றும் திட்ட அனுமதி எண் 58/2019
2.காடாம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண் 14/2018-19 நாள் : 15.02.2019.

கோயம்புத்தூர் மாவட்டம்,சூலூர் ஊராட்சி ஒன்றியம் காடாம்பாடி ஊராட்சி காடாம்பாடி நில அளவு எண் 138/2B ,138/3B ல் மனுதாராகள் திரு.G.S.ராஜேஸ் மற்றும் 3 நபர்கள், என்பர்களால் அமைந்துள்ள4.445 ஏக்கர் பரப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் கண்ட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் அவாகளிடமிருந்து திட்ட அனுமதி வரப்பெற்றுள்ளது.எனவே கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும திட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இவ்வூராட்சி மன்றத்தின் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. மனைப்பிரிவு கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும உறுப்பினர் செயலர் அவர்களின் திட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்ட சிறப்பு மற்றும் பொது அனைத்து நிபந்தனைகளும் உட்பட்டதாகும்.
2. திட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்ட அனைத்து பணிகளையும் முழுமையாக மனுதாரர் செய்து தர வேண்டும்.
3. மனைப்பிரிவிற்கு குடிநீர் வசதி செய்து தர வேண்டும்

137

4. தெருவிளக்கு வசதி செய்து தர வேண்டும்.
5. மனைப்பிரிவில் வீடுகள் 50% விழுக்காடுக்கும் மேலாக அபிவிருத்தி அடையும் வரை மின்கட்டணம் மனுதாரர் தன் சொந்த பொறுப்பில் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.
6. தார் சாலை வசதிகள் ஏற்படுத்த வேண்டும்
7. வடிகால் வசதிகள் ஏற்படுத்த வேண்டும்

தனி அலுவலர்
காடாம்பாடி ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
சூலூர் வட்டாரம்.

8/5/19

பெறுநர்:

திரு. G.S.ராஜேஸ் மற்றும் 3 நபர்கள்,
எண்.3/136F,காடாம்பாடி ரோடு,
காங்கேயம்பாளையம்,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாட்டம்.

1. G.S. Rajesh
2. [signature]
3. G.V. [signature]
4. [signature]